சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.05/2023

18.03.2026

பி.வா.சா.1 திரு.ஜெயச்சந்திரன், த/பெ. தங்கராசு

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எங்கள் அலுவலக எல்லைக்குட்பட்ட மின் கம்பிகளை முறையாக பராமரிக்காததால் நாடிமுத்து என்பவர் வயல் வேலைக்கு சென்ற போது கடந்த 21.10.2019 அன்று மின்கம்பி அறுந்துவிழுந்து ஏற்பட்ட மின் விபத்தில் நாடிமுத்து இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. இறந்த நாடிமுத்துவுக்கு வயது 74 என்றாலும் அதனை வழக்கிற்காக மறுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வாதிகள் தான் இறந்த நாடிமுத்துக்கு வாரிசுகள் என்பதை காட்ட உரிய ஆவணம் தாக்கல் செய்துள்ளார் என்றாலும் வழக்கிற்காக வாதிகள் நாடிமுத்துவின் வாரிசுகள் இல்லை என மறுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நாடிமுத்துவின் இறப்பினால் அவரின் வாரிசுகளான வாதிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றாலும் அந்த நஷ்டத்தை பிரதிவாதிகள் கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றாலும் சரியல்ல. 2 முதல் 6 வாதிகள் திருமணம் ஆகி அவரவர்கள் தனித்தனியாக வாழ்ந்து வருகிறார்கள் என்றாலும் ஆவணம் எதுவும் இல்லாமல் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாடிமுத்து மின்விபத்தில் தான் இறந்தார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாடிமுத்துவின் இறப்பிற்கு மின்கம்பிகளை முறையாக பராமரிக்காதது தான் காரணம் என்றாலும் எனவே, தாவாவில் கோரியுள்ள தொகையை வாதிகளுக்கு நஷ்ட ஈடாக கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றாலும் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.